2005 மார்ச் 14]

திரு. வி.ஆர். ராஜாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் பகுதி என்பது மிகவும் பின்தங்கிய பகுதி. இந்தப் பகுதிக்கு சாத்தியாற்றிலிருந்து தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கும்படிக் கேட்டுக்கொண்டு, இந்த ஆண்டு இல்லாவிட்டாலும், அடுத்த நிதியாண்டில், அதாவது, 2006 ஆம் ஆண்டு தமிழகத்தில் முதலமைச்சராக மீண்டும் அன்பு தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பொறுப்பேற்ற பின்னால், இத்திட்டத்தை நிறைவேற்றித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கோணம்பட்டி கிராமத்தில் சாத்தியாறு ஓடையின் குறுக்கே கட்டப்பட்டுள்ள சாத்தியாறு ஓடை நீர்த்தேக்கம் 29 அடி கொள்ளளவு கொண்டது. தண்ணீர் திறப்பு விதிகளின்படி செப்டம்பர் 25 ஆம் தேதி பருவ மழை பெய்து சாத்தியாறு ஓடை நீர்த்தேக்கத்தில் போதுமான தண்ணீர் இருந்தால், 1,029 ஏக்கர் பழைய ஆயக்கட்டில் உள்ள 10 கண்மாய்களுக்கு பாதிக் கொள்ளளவு தண்ணீர் நிரம்பும்படி தண்ணீர் திறந்துவிட்டு, பாதி நிரம்பியவுடன் அணையின் நீர்மட்டம், ஆழம் 16 அடி இருந்தால், 412 ஏக்கர் புதிய ஆயக்கட்டுக்குத் தண்ணீர் வழங்காமல் பழைய ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு மட்டுமே நீர் வழங்கப்படவேண்டும். கடந்த பல ஆண்டுகளாக சரியான பருவத்தில் போதுமான அளவு பருவ மழை கிடைக்கப்பெறாததால் சாத்தியாறு ஓடை நீர்த்தேக்கத்திலுள்ள பழைய ஆயக்கட்டின் கீழுள்ள 10 கண்மாய்களுக்குப் போதிய தண்ணீர் வழங்க இயலவில்லை. இந்நிலை தொடர்ந்து நீடித்து வருவதால், மானாவாரி கண்மாயாகிய தேவசேரி கண்மாய்க்கு சாத்தியாறு நீர்தேக்கத்திலிருந்து தற்போது தண்ணீர் வழங்க சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 148, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

148—

இலவச வீட்டுமனைப் பட்டா

***31692—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, 17-வது வட்டம் பகுதியில் குடிசைகளில் வாழும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இப்பகுதிகள் ஆட்சேபகரமான புறம்போக்கு என்பதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. த. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வினா எண் 149, திரு. ப. அரசன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

149—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***60678—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, திருப்பரங்குன்றம் அருள்மிகு முருகன் கோயில் வருமானத்திலிருந்து மதுரையில் மகளிருக்கான கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வருமானத்திலிருந்து மதுரையில் மகளிருக்கான கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராண்டுக்கு முன்னாலே என்னுடைய தொகுதியின் சகோதரர் ஒருவருடைய கல்யாணத்திற்காக திருப்பரங்குன்றம் சென்றிருந்தேன்.